# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# எம்.சி.ஓ.பி. எண். 407/2023

2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11ம் நாள் புதன்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. உமா நாக விஜயலட்சுமி | | |
| க/பெ. | பிரசாத ராஜீ | வட்டம் | பொன்னேரி |
| கிராமம் | கிழக்கு காவாங்கரை | வயது | 41 |
| தொழில் | இல்லத்தரசி | மாவட்டம் | திருவள்ளூர் |

**முதல் விசாரணை**

1. நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தையும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தாயரிக்கப்பட்து அந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடைய தான். ம.சா.ஆ 1 முதல் 18வரை எனது தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்யதுள்ளேன்.

**<u>மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்கள்</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ 1 | முதல் தகவல் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ 2 | விபத்து பதிவேட்டு நகல் |
| ம.சா.ஆ 3 | மருத்துவ விடுவிப்பு சான்றிதழ் (25.06.2023 முதல் 19.07.2023) அசல் |
| ம.சா.ஆ 4 | மருத்துவ விடுவிப்பு சான்றிதழ் (23.08.2023 முதல் 28.08.2023) அசல் |
| ம.சா.ஆ 5 | மருத்துவ விடுவிப்பு சான்றிதழ் (20.09.2024 முதல் 24.09.2024) அசல் |
| ம.சா.ஆ 6 | தொடர் சிகிச்சை ஆவணம் அசல் |
| ம.சா.ஆ 7 | மருத்துவ இரசீதுகள் அசல் மற்றும் நகல் |
| ம.சா.ஆ 8 | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ 9 | சி.டி.ஸ்கேன் எண்ணிக்கை 3 அசல் |
| ம.சா.ஆ 10 | சி.டி.ஸ்கேன் அறிக்கை (RIGHT ANKLE) அசல் |
| ம.சா.ஆ 11 | கதிரியக்கப் படம் எண்ணிக்கை 2 (வலது பாத எலும்பு முறிவு) அசல் |
| ம.சா.ஆ 12 | கதிரியக்கப் படம் (எலும்பு முதுகெலும்பு எலும்பு முறிவு) அசல் |
| ம.சா.ஆ 13 | கதிரியக்கப் படம் (தோள்பட்டை எலும்பு முறிவு) அசல் |
| ம.சா.ஆ 14 | மனுதாரர் கணவரின் ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ 15 | விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ 16 | இன்சூரன்ஸ் பாலிசி சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ 17 | மனுதாரரின் பான் கார்ட் நகல் |
| ம.சா.ஆ 18 | மனுதாரரின் புகைப்படம் |
| நீ.ம.சா.ஆ. 1 | மனுதாரரின் ஊனச் சான்றிதழ் அசல் |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

25.06.2023 அன்று மாலை 6.30 மணியளவில் நான் இருசக்கர

வாகனத்தின் பின்னால் அமர்ந்து சென்றபோது தண்ணீர் லாரி எதிரே அதிவேகமாக வந்து மோதிவிட்டது. லாரியின் பதிவு எண் 1395. வலது பக்க தோள்பட்டை எலும்பு உடைந்துவிட்டது. வலது கால் பாதத்தில் சிதைவு காயம் ஏற்பட்டது. விலா எலும்பிலும் முதுகு தண்டுவடத்திலும் எலும்புகளில் கீறல் ஏற்பட்டது. பிரசாந்த் மருத்துமனையில் சிகிச்சை பெற்றேன். அதே மருத்துவமனையில் 3 முறை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். அங்கு எனக்கு அறுவை சிகிச்சை செய்தார்கள். விபத்து எனக்கு 39 வயது. நான் இல்லத்தரசியாக இருந்தேன். விபத்து குறித்து எனது கணவர் புகார் அளித்தார். புகார் கொடுப்பதில் ஒரு நாள் காலத்தாமதம் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் விபத்து சமயத்தில தலைகவசம் அணியவில்லை. நான் விபத்து குறித்து வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. இந்த வழக்கில் நான் குற்றப்பத்திரிக்கையும் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையும் தாக்கல் செய்யவில்லை. என் மீது மோதிய லாரியின் ஓட்டுநரிடம் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றால் சரியல்ல. எனது கணவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்திடமிருந்துதான் இழப்பீடு கேட்கவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி